# அறிவித்தல் C

2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பிலான பிரேரணையின் 8 (அ) (viii) பந்தியின் பிரகாரம் தெரிவுக் குழுவினால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலக் மாரபன அவர்களை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன அவர்களை அக் குழுவில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.